**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சந்திரயான்-3: புவி சுற்றுப் பாதை தொலைவு அதிகரிப்பு

**சென்னை, ஜூலை 16:** புவி வட்டப் பாதையில் பயணித்துவரும் சந்திரயான்-3 விண்கலத்தின் முதல்கட்ட சுற்றுப் பாதை தொலைவு வெற்றிகரமாக அதிகரிக்கப்பட்டது.

எதிர் வரும் நாள்களில் திட்டமிட்டபடி அடுத்தடுத்து சுற்றுப் பாதைகளின் தொலைவை அதிகரித்து நிலவை நோக்கி செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவின் தென்துருவத்தையொட்டிய பகுதிகளில் ஆய்வு நடத்துவதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இஸ்ரோ வடிவமைத்தது.

**நீள் வட்ட சுற்றுப்பாதையில்...:** எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை (ஜூலை 14) வெற்றிகரமாக சந்திரயான்-3 விண்ணில் செலுத்தப்பட்டது. குறைந்தபட்சம் 170 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 36,500 கி.மீ. தொலைவும் கொண்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் அந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது.

**வெற்றிகரமாக...:** தற்போது சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு வெற்றிகரமாக உயர்த்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப் பாதை தொலைவை அதிகரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதன்படி, முதல் கட்ட சுற்றுப்பாதை உயர்த்தும் முயற்சி பெங்களூரில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்திலிருந்து வெற்றிகரமாக கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

**சீரான வேகத்தில் வலம்:** தற்போது விண்கலம் குறைந்தபட்சம் 173 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 41,762 கி.மீ. தொலைவும் கொண்ட சுற்றுப்பாதையில் சீரான வேகத்தில் புவியை வலம் வருகிறது.

அடுத்த 2 வாரங்களுக்கு சந்திரயான்-3 விண்கலம் புவி சுற்று வட்டப் பாதையில் பயணிக்கும். படிப்படியாக தொலைவை அதிகரித்து ஆக. 1-ஆம் தேதி நிலவின் ஈர்ப்பு விசைக்குள் உந்தி தள்ளப்படும்.

அதன் பின்னர், சந்திரயான்-3 நிலவின் சுற்றுப் பாதையில் பயணத்தைத் தொடங்கும். சுமார் 41 நாள்களுக்குப் பிறகு, அதாவது ஆக. 23-ஆம் தேதி மாலை 5.47 மணிக்கு நிலவில் சந்திரயான்-3 தரையிறங்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# ஆவினில் சுத்திகரித்த கழிவுநீர் மூலம் 'பசுந்தீவனம் வளர்க்கும் திட்டம்'

## பால் உற்பத்தியாளர்களுக்கு மானியத்தில் வழங்கவும் ஏற்பாடு

சு. பாண்டியன்


**திருவள்ளூர், ஜூலை 16:** திருவள்ளூர் அருகே காக்களூர் ஆவினில் தேங்கி நிற்கும் சுத்திகரித்த கழிவு நீர் மூலம் காலியாக உள்ள ஒரு ஏக்கரில் பசுந்தீவனம் வளர்த்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருவள்ளூர் அருகே காக்களூர் சிட்கோவில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பாலிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருள்கள் தயார் செய்யும் வளாகமும் கடந்த 30-ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகின்றன.

இங்கு திருவள்ளூர் மாவட்டத்தில் கிராமங்களில் 190 பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் நாள்தோறும் 1 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்த பாலை குளிரூட்டும் மையம் மூலம் பதப்படுத்தி திருவள்ளூர், காஞ்சிபுரம் பகுதிகளுக்கு 60,000 லிட்டர் வரை விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் மீதமுள்ள பாலில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட உபபொருள்கள் தயார் செய்யப்படுகின்றன.

இந்த குளிரூட்டும் மையத்தில் இருந்து நாள்தோறும் 80,000 லிட்டர் கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது. இதற்காக வளாகத்தில் 1 லட்சம் லிட்டர் வரையில் சுத்திகரிப்பு செய்யும் வகையில் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுத்திகரிக்கப்படும் நீர் வெளியேற வழியின்றி அந்த வளாகத்தில் குட்டை போல் தேங்கியுள்ளது.



ஆவின் வளாகத்தில் குட்டையில் தேங்கியுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர்.
(வலது) ஒரு லட்சம் லிட்டர் சுத்திகரிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம்.

ஏற்கெனவே கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகளும் பராமரிப்பின்றி காணப்படுகின்றன.

இதனால், சுற்றியுள்ள பகுதிகளில் பொதுமக்கள் குடியிருக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் ஏற்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.

ஏற்கெனவே ஆவின் வளாகத்தில் கழிவுகள் அகற்றப்படாமல் உள்ளன. இந்த நெகிழி பொருள்களால் கொசு உற்பத்தி அதிகரிப்பதோடு, பொதுமக்களுக்கு சுகாதாரக் கேட்டையும் ஏற்படுத்தும் சூழ்நிலையும் இருந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, ஆவின் வளாகத்தை தூய்மையாகப் பராமரித்து, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பசுமை வளாகமாக மாற்றவும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அதன் பேரில் ஆவின் வளாகத்தில் குட்டையில் தேங்கியுள்ள சுத்திகரித்த கழிவு நீரை பயன்படுத்தி பசும் தீவனம் மற்றும் மரங்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளதாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து ஆவின் பொது மேலாளர் ரமேஷ்குமார் கூறியதாவது:

ஆவின் வளாகத்தில் நிறுவியுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் நாள்தோறும் கழிவு நீரை சுத்திகரித்து 80,000 லிட்டர் வரையில் வெளியேற்றப்படுகிறது. இதனால் துர்நாற்றம் ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேங்கியுள்ள சுத்திகரித்த கழிவு நீர் மூலம் ஒரு ஏக்கரில் கோ-5 பசுந்தீவனம் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக அடுத்த வாரம் 13 புல்கரணைகள் நடவு செய்யப்பட உள்ளன. இந்த புல்கரணைகளை முதலில் 75 நாள்களும், அதற்கு அடுத்து 45 நாள்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். இதன் மூலம் 5 முதல் 7 மெட்ரிக் டன் வரையில் பசுந்தீவனம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளன.

இதை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு 20 கிலோ வரையில் பசுந்தீவனம் ஆவின் மூலம் ரூ.1, பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் ரூ.1 என மானியமும் வழங்கப்படுகிறது. இதுபோன்ற பசுந்தீவனம் கறவை மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியும் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# 'நான் முதல்வன்' திட்டத்தால் 1.50 லட்சம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை, ஜூலை 16:** 'நான் முதல்வன்' திட்டம் மூலம் சுமார் ஒன்றரை லட்சம் கல்லூரி மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை காணொலி மூலம் தனியார் சட்ட அகாதெமியை முதல்வர் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவிகளின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாணவர்கள் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்று வழிகாட்டுகிறது. ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களை படிப்பில், திறமையில் மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 'நான் முதல்வன் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 463 பொறியியல் கல்லூரிகளில் 4 லட்சத்து 72 ஆயிரத்து 972 மாணவர்களும், 861 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 8 லட்சத்து 51 ஆயிரத்து 338 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

பொறியியல் கல்லூரிகளில் கடந்த கல்வியாண்டில் 'நான் முதல்வன்' திட்டம் மூலம் 1லட்சத்து 15 ஆயிரத்து 682 இறுதியாண்டு மாணவர்களுக்கு 70-க்கும் மேற்பட்ட திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டு படித்த 2 லட்சத்து 48 ஆயிரத்து 734 மாணவர்களுக்கு திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அவர்களில் பலருக்கு ஆண்டுக்கு ரூ.40 லட்சம் வரையிலான ஊதியத்தில் வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயின்ற மாணவர்களுக்காக நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 65 ஆயிரத்து 34 பொறியியல் கல்லூரி மாணவர்கள், 83 ஆயிரத்து 223 கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் என மொத்தம் 1 லட்சத்து 48 ஆயிரத்து 257 மாணவர்கள் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

# சென்னை ரயில்வே கோட்டத்தில் கதி சக்தி பன்னோக்கு சரக்கு முனையம்

**சென்னை, ஜூலை 16:** சென்னை ரயில்வே கோட்டத்தில் முதல் கதி சக்தி பன்னோக்கு சரக்கு முனையம் செயல்பாட்டுக்கு வந்தது.

2021-ஆம் ஆண்டு பிரதம மந்திரி கதி சக்தி திட்டம் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய பகுதியாக, 2025-ஆம் நிதியாண்டுக்குள் சரக்கு போக்குவரத்து திறனை 1,600 டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த வகையில் ரயில்வே சரக்கு முனையங்கள் பன்னோக்கு சரக்கு முனையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. சென்னை கோட்டத்தில் பன்னோக்கு சரக்கு முனையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரயில்வேயில் சரக்கு ஏற்றி இறக்குவது எளிமையாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்படும்.

# வணிகவியல் வளம் தர வேண்டும்

பெ. சுப்ரமணியன்

தமிழகத்தில் மேல்நிலைக் கல்வியை முடிக்கும் அனைவரும் உயர்கல்வி பயில வேண்டும் என்ற நோக்கில் அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. அதற்காக நடப்பாண்டில் முன்னதாகவே சேர்க்கையைத் தொடங்கியது. மாநிலத்தில் உள்ள 764 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் இளநிலைப் படிப்புகளுக்கு 1,07,299 இடங்கள் உள்ளன. அதற்கு 2,46,295 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

உயர்கல்வியைப் பொறுத்தவரை, மாணவர்கள் சேர்க்கையின் பாலின அமைப்பு மாறிவருகிறது. அதிக பெண்கள் உயர்கல்வி பயில முன்வருகின்றனர். ஒட்டுமொத்தமாக 2015-16-இல் 100 மாணவர்களுக்கு 96 ஆக இருந்த மாணவியர் எண்ணிக்கை 2019-20-இல் 96 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் மொத்த சேர்க்கை விகிதம் 2015-16-இல் 24.5 % இல் இருந்து 2019-20-இல் 27.1 % ஆக உயர்ந்துள்ளது. இந்த மாற்றம் பெண்கள் அதிக அளவில் இணைந்ததால்தான் நிகழ்ந்துள்ளது.

உயர்கல்வி பயிலும் மாணவியர்க்கு தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் 'புதுமைப் பெண் திட்ட' நிதியுதவி காரணமாக அரசுப் பள்ளிகளில் மட்டுமின்றி கல்லூரிகளிலும் சேரும் மாணவியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 15 % அதிக விண்ணப்பங்கள் வந்துள்ளன.

கல்லூரிகளில், கலை பாடப்பிரிவைப் பொறுத்தவரை, மற்ற பட்டப் படிப்புகளைக் காட்டிலும் இளநிலை வணிகவியல் பாடப்பிரிவை அதிகமானோர், குறிப்பாகப் பெண்கள் தேர்வு செய்துள்ளனர். சிறுசிறு வேலை வாய்ப்புகள், பட்டய கணக்காளராகும் வாய்ப்பு, வங்கிப் பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெற உதவும் என்பவையெல்லாம் இதற்கான காரணங்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால் உண்மை நிலவரம் வேறாக உள்ளது. இளங்கலை வணிகவியல் பாடப்பிரிவில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு வரை ஒவ்வொரு 100 மாணவர்களுக்கும் 90 மாணவியர் என்றிருந்த விகிதம் 2019-20-இல் 100-க்கு 100 என உயர்ந்துள்ளது. 2019-20-இல் இளங்கலை வணிகவியல் பாடப்பிரிவில் சேர்க்கை பெற்ற 41.6 லட்சம் பேரில் 20.3 லட்சம் பேர் மாணவியரே.

மேல்நிலைக் கல்வியில் கணிதம், அறிவியல் பாடங்களைப் பயில விரும்பாத அல்லது சேர்க்கை கிடைக்காத அனைவரும் வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல், வரலாறு ஆகிய பாடங்களைக் கொண்ட தொழிற்கல்வி பாடப்பிரிவில் சேர்க்கை பெறுகின்றனர். பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் இப்பாடப்பிரிவுகள் உள்ளன.

தொழிற்கல்வி பாடப்பிரிவில் தணிக்கையியல், தட்டச்சு ஆகிய பாடங்களைக் கொண்ட மற்றொரு பிரிவு உள்ளது. இப்பாடப் பிரிவு குறைவான அரசுப் பள்ளிகளிலேயே உள்ளது. இதில் சேர்க்கை பெறுவோர் எண்ணிக்கையும் குறைவாகும்.

தமிழகத்தில் சில மாவட்டங்களில் கணிதம், அறிவியல் பாடங்களைக் காட்டிலும் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பிளஸ் 2 தேர்வு எழுதும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதனால் பின்தங்கிய நிலையில் இருக்கும் மாவட்டங்கள் பிளஸ் 2 தேர்ச்சி விகிதத்தில் முதலிடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் வெளியான பிளஸ் 2 தேர்வு முடிவுகளில் சில பாடங்களைத் தவிர மற்ற பாடங்களில் அதிகப்படியானோர் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். இவ்வாறு 100-க்கு 100 மதிப்பெண் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அண்மையில் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 23,957 பேர் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றிருந்தனர்; நிகழாண்டில் 32,501 பேர் பெற்றுள்ளனர்.

தொழிற்கல்வி பாடப்பிரிவில் கணக்குப் பதிவியல் பாடத்தில் 6,573 பேரும், வணிகவியல் பாடத்தில் 5,678 பேரும் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் கல்லூரிகளில் அறிவியல் பாடத்தில் சேர்க்கை பெற இயலாது. அதனால் அவர்களின் தேர்வு வணிகவியலாகவே இருக்கும்.

வணிகவியலில் சேர்க்கை பெற இயலாதவர்கள் மட்டுமே மொழிப்பாடங்கள், வரலாறு, பொருளியல் போன்ற இதர பாடங்களைத் தேர்வு செய்கின்றனர். அதுபோலவே, கல்லூரிகளில் வணிகவியல் பாடப்பிரிவின் மொத்த இடங்களில் 80 % இடங்கள் இவர்களுக்கே ஒதுக்கப்படுகிறது. மீதமுள்ள 20 % இடங்களில் தணிக்கையியல், தட்டச்சு பாடப்பிரிவில் பயின்றவர்கள் சேர்க்கை பெறுகின்றனர்.

வணிகவியல் பாடப்பிரிவில் சேர்க்கை பெற வேண்டும் என்று விரும்புவோர் தனியார் கல்லூரிகளில் சேர்க்கை பெறுகின்றனர். கூடுதல் சேர்க்கைக்கோ கூடுதல் பிரிவுக்கோ அனுமதிக்கப்படாத நிலையில் வணிகவியல் தொடர்பான இதர பிரிவுகளில் சேர்க்கை பெறவைக்கின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாகவே அதிகரித்து வரும் வணிகவியல் ஆர்வத்தால் தனியார் கல்லூரிகளில் இளநிலை வணிகவியலில் (பி.காம்) கணக்கியல், நிதி, சந்தைப்படுத்துதல் மேலாண்மை, தணிக்கையியல், கணினி பயன்பாட்டியல் என ஏராளமான பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஆனால் அரசு, தனியார் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பொதுவான இளங்கலை வணிகவியல் பாடம் இவையனைத்திற்கும் உண்டான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. அதனால் அரசு, தனியார் கல்லூரிகளில் அண்மைக்காலமாக பொதுவான வணிகவியல் பாடத்திற்கான சேர்க்கை அதிகரித்து வருகிறது.

போதுமான வகுப்பறை வசதி, பேராசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 20 % அளவுக்கே கூடுதல் சேர்க்கைக்கு பல்கலைக்கழகத்தின் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறு கூடுதலான சேர்க்கைக்கு அனுமதி வழங்கி அதிகப்படியான வணிகவியல் பட்டதாரிகளை உருவாக்குவதால் பலனேதும் இருப்பதில்லை.

அரசு நிறுவனம், தனியார் நிறுவனங்களில் நிதித்துறை, வங்கித்துறை, ஆயுள் காப்பீடு, மனிதவள மேலாண்மை ஆகிய துறைகளில் முதலீட்டு ஆய்வாளர், நிதி ஆய்வாளர், கணக்காளர், காப்பீட்டு மேலாளர், நிதி ஆலோசகர் என அதிகப்படியான வேலை வாய்ப்புகள் உள்ளன.

அவற்றைப் பெறுவதற்கு ஏற்றாற்போல் பாடத்திட்டங்களை அமைக்க வேண்டும். அப்போதுதான் எதிர்வரும் காலங்களில் வணிகவியல் மாணவர் வாழ்வில் வளம் சேர்ப்பதாக அமையும்.

EVA STALIN IAS

# வேலைவாய்ப்பில் விழிப்புணர்வு தேவை!



டி.எஸ்.ஆர். வேங்கடரமணா

**வேலைக்கு லஞ்சம் கொடுப்பது குற்றமானாலும், தன்னால் வேலை வாங்கித்தர முடியாது என்று தெரிந்த ஒரு நபர் வேலை வாங்கித் தருகிறேன் என்று பொய் சொல்லி, வேலை இல்லாமல் கஷ்டப்படும் நபரை ஏமாற்றுவது சரியா' என்று நான் நீதியரசரிடம் கேட்டேன்.**

கட்டுரையாளர்: மூத்த வழக்குரைஞர்.

# தவிர்ப்பது தவறு!

இந்தியாவைப் பொறுத்தவரை 75 ஆண்டுகள் கடந்த பிறகும் கூட நம்மால் சரியான புள்ளிவிவரங்களைத் திரட்டவோ, அதன் அடிப்படையில் திட்டங்கள் வகுக்கவோ முடியாத நிலை தொடர்கிறது என்கிற அவலத்தைப் பதிவு செய்யாமல் இருக்க முடியவில்லை.

2021-இல் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பு இன்னும்கூட தொடங்கப்படவில்லை. உலகில் உள்ள பல நாடுகளிலும் கொள்ளை நோய்த்தொற்று காலத்திலும் கூட மக்கள்தொகை கணக்கெடுப்பு தள்ளிப்போடப்படவில்லை. மக்கள்தொகை கணக்கெடுப்பும் அதிலிருந்து பெறப்படும் தரவுகளும்தான் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவிக்கவும், செயல்படுத்தவும் அடிப்படையாக இருக்கின்றன.

பெரும்பாலான புள்ளிவிவரங்கள் அரசுக்கு சாதகமானதாகவும், பெருமை சேர்ப்பதாகவும் இருப்பதில்லை. நூறாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு தேசம் குடியரசாகி, வளர்ச்சிப் பாதையில் நடைபோடுவது எளிதல்ல. வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது பின்தங்கியிருப்பது எதிர்பார்க்கக் கூடியதுதான்.

சர்வதேச அளவிலான கடனுதவி பெறவும், முதலீடுகளை ஈர்க்கவும் புள்ளிவிவரங்கள் சாதகமாக இல்லாமல் இருப்பது தவிர்க்க முடியாதது. அதற்காக புள்ளிவிவரம் சேகரிக்காமல் இருப்பதோ, தவறான புள்ளிவிவரங்களைப் பதிவு செய்வது முறையல்ல. அது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது.

ஆண்டுதோறும் மத்திய அரசின் குடும்பநலத் துறை, தேசிய குடும்ப ஆரோக்கிய கணக்கெடுப்பை நடத்துகிறது. அதற்கு 'நேஷனல் ஃபேமிலி ஹெல்த் சர்வே' என்று பெயர். நடப்பு ஆண்டுக்கான (2023-24) கணக்கெடுப்பில் பெண்கள், குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்த குறியீடுகளில் ஒன்றான ரத்த சோகையை, பட்டியலில் இருந்து அகற்றத் தீர்மானித்திருக்கிறது அமைச்சகம். இந்த மாதம் தொடங்க இருக்கும் அந்தக் கணக்கெடுப்பு, மகளிரின் ரத்த சோகை குறித்த புள்ளிவிவரம் இல்லாமல் முழுமையானதாக இருக்காது.

தேசிய குடும்ப ஆரோக்கிய கணக்கெடுப்பு என்பது இந்திய மக்கள்தொகையினரின் ஆரோக்கியம், ஊட்டச்சத்து ஆகியவை குறித்த தெளிவை ஏற்படுத்துவதுடன், மகளிர் - குழந்தைகள் நலனுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் என்னென்ன பிரச்னைகளில் அரசு நேரடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்பது முடிவெடுக்கப்படும்.

2018-இல் இந்தியாவில் மகளிர் - குழந்தைகள் மத்தியில் ரத்த சோகை அதிகரித்து வந்ததைத் தொடர்ந்து, 'ரத்த சோகை இல்லாத இந்தியா' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுகுறித்து தேசிய குடும்ப ஆரோக்கிய கணக்கெடுப்பு 2021 சில தெளிவான புள்ளிவிவரங்களைத் தருகிறது. இந்தியாவில் 57% மகளிரும், 67% குழந்தைகளும் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்தக் கணக்கெடுப்பு தெரிவித்திருந்தது.

ஏழு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களில் பெண்கள், குழந்தைகளின் விரலில் இருந்து ரத்த மாதிரிகளை எடுத்து, முந்தைய ஐந்து ஆய்வுகளில் ரத்த சோகை சோதனை நடத்தப்பட்டது. சொல்லப் போனால், 1991-இல் இருந்து ரத்த சோகைக்கான சோதனைகள் அப்படித்தான் நடத்தப்படுகின்றன.

சோதனைகள் அப்படித்தான் நடத்தப்படுகின்றன.

2019 -21 புள்ளிவிவரம் அதிர்ச்சி அளிப்பதாக இருந்ததைத் தொடர்ந்து, விரலில் ரத்தம் எடுக்கும் சோதனை முறை தவறானது என்றும், அதனால் பெறப்பட்ட புள்ளிவிவரம் மிகைப்படுத்தப்பட்டது என்றும் இப்போது அரசு தெரிவிக்கிறது. விரலுக்குப் பதிலாக நேரடியாக ரத்த நாளங்களில் இருந்து மாதிரிகள் எடுத்து அதன் மூலம் ரத்த சோகை பரிசோதனைகள் நடத்த வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

உலகில் 90-க்கும் அதிகமான நாடுகளில், அதிலும் குறிப்பாக, வளர்ச்சி அடைந்த பல நாடுகளில் நடத்தப்படும் விரல் ரத்த சோதனையை புறந்தள்ளி புதிய முறையை அறிமுகப்படுத்துவதின் நோக்கம் புரியவில்லை. சோதனை நடத்த தனியாருக்கு ஒப்பந்தம் வழங்குவதற்கு வேண்டுமானால் புதிய முறை பயன்படுமே தவிர, அதிக எண்ணிக்கையிலான சோதனைகள் நடத்த முடியாது என்பது அதிகாரிகளுக்கு தெரியாமல் இருக்காது.

ரத்த சோகையை கணக்கெடுப்பில் இருந்து அகற்றியிருப்பது அதைவிட விசித்திரமாக இருக்கிறது. இந்திய மகளிர் மத்தியில் ரத்த சோகை அதிகமாக காணப்படுவதற்கு அடிப்படை காரணம் என்ன, ரத்த சோகைக்கும் பெண்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதற்கும் தொடர்பிருக்கிறதா போன்றவை குறித்த ஆய்வுகள் அவசியமாகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் 2011 புள்ளிவிவரப்படி, உலகில் 36% மகளிர் குடும்பக் கட்டுப்பாடு இந்தியாவில்தான் நடைபெறுகிறது. 2019 - 21 ஆய்வின்படி, 15 முதல் 49 வரையிலான கர்ப்பம் தரிக்காத பெண்களில் ரத்த சோகையுள்ளவர்கள் விகிதம் 57.2%. அதே வயதுப் பிரிவில் கர்ப்பிணிப் பெண்களில் ரத்த சோகையுள்ளோர் விகிதம் 52.2%.

அதே ஆய்வு பெண்கள் மத்தியில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது அதிகரித்து வருவதையும் தெரிவிக்கிறது. நகர்ப்புறத்தை விட கிராமங்களில் பெண்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வது அதிகமாகக் காணப்படுவதாகவும், அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கும் ஆய்வு இன்னொன்றையும் குறிப்பிடுகிறது. அகில இந்திய அளவில் ஆண்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது 0.3% என்கிற அளவில் தேக்கம் அடைந்திருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையின்போது ரத்தப் போக்கு காரணமாக ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மகளிர் உயிரிழக்கிறார்கள். லட்சக்கணக்கான பெண்கள் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கணக்கெடுப்பில் இருந்து ரத்த சோகை அகற்றப்படுவதன் மூலம் அதுகுறித்த உண்மைநிலை மறைக்கப்படுகிறது; அதற்குத் தீர்வு காண்பது தவிர்க்கப்படுகிறது. இது தவறான முடிவு.

# சாலை விபத்தில் உயிர் காக்க உதவினால் வெகுமதி

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, ஜூலை 16:** சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்ற உதவிபுரிவோருக்கு வெகுமதி அளிப்பதற்கான உத்தரவை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, மத்திய அரசால் ஏற்கெனவே வெகுமதியாக வழங்கும் 5,000 ரூபாயுடன், மாநில அரசு சார்பில் ரூ.5,000 சேர்த்து அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உள்துறைச் செயலர் பி.அமுதா பிறப்பித்த உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த மார்ச் மாதம் நடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் போக்குவரத்துத் துறை மானிய கோரிக்கை மீது நடந்த விவாதங்களுக்கு பதிலளித்து புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

அதில், 'சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவும் நல்மனம் படைத்தோரை ஊக்குவிக்கும் வகையில் ஏற்கெனவே மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த ரூ.5,000 தொகையுடன், மாநில அரசின் பங்களிப்பாக சாலைப் பாதுகாப்பு நிதியில் இருந்து கூடுதலாக ரூ.5,000 வழங்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**பொன்னான நேரத்துக்குள்...:** இதைப் பெறுவதற்கு, சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காக்க உதவும் வகையில், அவர்களை பொன்னான நேரத்துக்குள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உயிரைக் காப்பாற்றியிருக்க வேண்டும்.

இதுபோன்ற நல்மனம் படைத்தவர்கள் குறித்த விவரங்களை காவல் நிலையம் அல்லது மருத்துவமனையிடம் பெற்று மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்வர்.

அதில், வெகுமதி பெறத் தகுதியானவர்கள் குறித்த பரிந்துரையை மாதந்தோறும் போக்குவரத்து ஆணையரகத்துக்கு மாவட்ட நிர்வாகம் அனுப்பி வைக்கும். இவ்வாறு தேர்வு செய்யப்படுவோரது வங்கிக் கணக்கில் ஆணையரகம் வாயிலாக ரூ.5,000 வரவு வைக்கப்படும். தங்களது அடையாளத்தை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவர்களுக்கு வெகுமதி வழங்கப்படாது.

**வழிகாட்டுதல்கள்:** வெகுமதியைப் பெறுவதற்கு சில வழிகாட்டுதல்களையும் போக்குவரத்து ஆணையர் வழங்கியுள்ளார். அதன்படி, உயிர்களைக் காப்பாற்றுவோருக்கு விபத்து எண்ணிக்கைக்கு ஏற்ப தலா ரூ.5,000 வழங்கப்படும். ஒரே விபத்தில் பல உயிர்களை ஒருவர் காப்பாற்றியிருந்தால் அவருக்கு ரூ.5,000 வழங்கப்படும். ஒருவரின் உயிரை பலர் காப்பாற்றியிருந்தால் ரூ.5,000 பகிர்ந்தளிக்கப்படும்.

ஒரே விபத்தில் பலரின் உயிரை பலர் காப்பாற்றியிருந்தால் அவர்கள் அனைவருக்கும் தலா ரூ.5,000 வழங்கப்படும். ரொக்கப் பரிசுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். இவ்வாறு வெகுமதி வழங்குவதற்கு உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு போக்குவரத்து ஆணையர் கோரியுள்ளார்.

இதை கவனமாக பரிசீலித்த அரசு, ஆணையரின் பரிந்துரையை ஏற்று சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்றுவோருக்கு மத்திய அரசின் சார்பில் வழங்கப்படும் தொகையுடன் மாநில சாலைப் பாதுகாப்பு நிதியில் இருந்து ரூ.5,000 வழங்க போக்குவரத்து ஆணையருக்கு அனுமதி அளிக்கிறது.

இந்தத் திட்டம் 2026-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS



# 27 பதக்கங்களுடன் இந்தியா 3–ஆம் இடம்

**பாங்காக், ஜூலை 16:** தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பில் இந்தியா 6 தங்கம், 12 வெள்ளி, 9 வெண்கலம் என 27 பதக்கங்களுடன் 3-ஆம் இடம் பிடித்து போட்டியை நிறைவு செய்தது.

கடைசி நாளான ஞாயிற்றுக்கிழமை மட்டும் இந்தியாவுக்கு 8 வெள்ளி, 5 வெண்கலம் என 13 பதக்கங்கள் கிடைத்தன. ஆசிய சாம்பியன்ஷிப்பில் இந்தியா கடந்த 2017–இல் (புவனேசுவரம்) 27 பதக்கங்கள் வென்றதே அதிகபட்சமாக இருந்த நிலையில், தற்போது அதை சமன் செய்துள்ளனர் இந்திய போட்டியாளர்கள்.

ஜப்பான் 37 பதக்கங்களுடன் (16, 11, 10) முதலிடத்தையும், சீனா 22 பதக்கங்களுடன் 2-ஆவது இடத்தையும் (8, 8, 6) பிடித்தன.

**குண்டு எறிதல்:** கடைசி நாள் போட்டிகளில், குண்டு எறிதல் மகளிர் பிரிவில் ஆபா கதுவா (18.06 மீ) வெள்ளி பெற்றார். மற்றொரு இந்தியரான மன்பிரீத் கௌர் (17 மீ) வெண்கலம் வென்றார். மன்பிரீத்தின் தேசிய சாதனை அளவை, தற்போது ஆபா சமன் செய்து வெள்ளி வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**200 மீ:** மகளிர் பிரிவில் ஜோதி யாராஜி (23.13 விநாடிகள்) புதிய பெர்சனல் பெஸ்ட் நேரத்துடன் வெள்ளி பெற்றார். ஏற்கெனவே 100 மீட்டரில் தங்கம் வென்ற ஜோதிக்கு, இது 2-ஆவது பதக்கமாகும்.

**5,000 மீ:** மகளிர் பிரிவில் பாருல் சௌதரி (15:52.35) வெள்ளிப் பதக்கம் பெற்றார். மற்றொரு இந்தியரான அங்கிதாவுக்கு (16:03.33) வெண்கலப் பதக்கம் கிடைத்தது. முன்னதாக பாருல் சௌதரி, 3,000 மீட்டரில் தங்கம் வென்றது நினைவுகூரத்தக்கது. அதிலேயே ஆடவர் பிரிவில் இந்தியாவின் குல்வீர் சிங் (13:48.33) வெண்கலம் பெற்றார்.

**ஈட்டி எறிதல்:** ஆடவர் பிரிவில் டி.பி. மானு (81.01 மீ) வெள்ளிப் பதக்கம் வென்றார். ஜப்பானின் ரோட்ரிக் கென்ஜி தங்கம் பெற்றார் (83.15).

**4*400 மீட்டர்:** ஆடவர் பிரிவில் அமோஜ் ஜேக்கப், முகமது அஜ்மல், மிஜோ குரியன் சாக்கோ, ராஜேஷ் ரமேஷ் கூட்டணி (3:1.80) வெள்ளியும், மகளிர் பிரிவில் ரிசோவானா மாலிக், ஐஸ்வர்யா மிஸ்ரா, ஜோதிகா தண்டி, சுபா வெங்கடேசன் அணி (3:33.73) வெண்கலமும் வென்றன.

**800 மீ:** கிஷன் குமார் ஆடவர் பிரிவிலும் (1:45.88), சந்தா மகளிர் பிரிவிலும் (2:01.58) 2–ஆம் இடம் பிடித்தனர்.

**20 கி.மீ. நடை:** மகளிர் பிரிவில் பிரியங்கா (1:34.24) இரண்டாவதாக வந்து வெள்ளியும், ஆடவர் பிரிவில் விகாஷ் சிங் (1:29.32) மூன்றாவதாக இலக்கை எட்டி வெண்கலமும் பெற்றனர்.

EVA STALIN IAS ACADEMY